வ.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல : 12/2020

எனது இல : **NP/07/10/04/43**
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்குமாகாணம்,
யாழ்ப்பாணம்.
**27.08.2020**

அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

**வடக்கு மாகாண தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் I லிருந்து விசேட தரத்திற்கு சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் தரமுயர்த்துதல் 2007-2018 (2020)**

வடமாகாண கௌரவ ஆளுநரால் அனுமதிக்கப்பட்ட வடக்கு மாகாண தொழில்நுட்ப சேவையின் சேவைப்பிரமாணக்குறிப்புகளுக்கமையவும், வடக்குமாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் G/NPC/A6/PPSC/Appr/Pro/To-Sp இலக்க, 31.01.2019 திகதிய கடிதத்தின் மூலம் வழங்கப்பட்ட அனுமதிக்கமையவும் வடக்கு மாகாண பொதுச்சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவியின் விசேட தரத்திற்கு சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் தரமுயர்த்துவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே குறிப்பிடப்பட்ட தகைமைகளையுடைய வடக்கு மாகாண தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவியைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும் ( தகைமையடைந்திருந்து ஓய்வு பெற்றவர்கள் உட்பட) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **28.09.2020** ஆகும்.

**02. ஆட்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள் :-**

2.1. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு/ சேவைப்பிரமாணக்குறிப்பிற்கு அமைவான நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

2.2. இவ்வறிவித்தலுக்கமைய விண்ணப்பிக்கும் தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்காக வடக்குமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் **திறமைநிலை ஒழுங்கு முன்னுரிமை** அடிப்படையில் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமைய பதவியுயர்வானது மேற்கொள்ளப்படும்.

2.3 மேலே குறிப்பிடப்பட்ட தரமுயர்விற்கு விண்ணப்பிப்பவர்கள் தங்களது விண்ணப்பப் படிவங்களை தமது திணைக்களத் தலைவரூடாக (ஓய்வுபெற்ற விண்ணப்பிக்க தகைமையுடையவர்கள் கடைசியாக பணியாற்றிய திணைக்களத் தலைவரூடாகவும்) சமர்ப்பித்தல் வேண்டும். திணைக்களத் தலைவரினால் சிபாரிசு செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2.4 விசேட தரத்திற்கு இணைத்துக்கொள்வதற்கான சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையிலான ஆட்சேர்ப்பு **2007.01.01** ஆந் திகதியிலிருந்து **2018.12.31** ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காகும். மேலும், குறித்த ஆண்டில் டிசம்பர் 31இல் காணப்படும் வெற்றிட எண்ணிக்கைக்கேற்ப ஆண்டுரீதியாக வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது சேவைமூப்பு மற்றும் திறமை ஒழுங்கு கருத்திலெடுக்கப்படும்.

**03. சம்பள அளவுத்திட்டம் :-**

விசேடதர நியமனத் திகதியில் நடைமுறையில் இருந்த சம்பள சுற்றுநிருபத்திற்கு ஏற்ப சம்பளபடி நிலை தீர்மானிக்கப்படும்.

## 04. ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அடிப்படைத் தகைமைகள் :-

### 4.1 வயதெல்லை :-

சேவை அனுபவம் மற்றும் திறமை அடிப்படையிலான ஆட்சேர்ப்பின் போது உச்சவயதெல்லை ஏற்புடையதல்ல.

### 4.2. தகைமைகள் :

**4.2.1 - 18.10.2000 இலிருந்து நடைமுறையிலுள்ள சேவைப்பிரமாணக் குறிப்பிற்கமைய**

தரம் I இல் **ஆறு (06)** வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். இங்கு திருப்திகரமான சேவை என்பது பதவியுயர்விற்கு உடன்முன்னரான ஐந்து (05) வருடங்களில் அனைத்து சம்பளப் படியேற்றங்களை பெற்றிருப்பதுடன் எவ்வித தண்டனைகளுக்கும் உட்படாதவராக இருத்தல் வேண்டும்.

**4.2.2 - 19.03.2010 இலிருந்து நடைமுறையிலுள்ள சேவைப்பிரமாணக் குறிப்பிற்கமைய**

தரம் I இல் **ஆறு (06)** வருடங்கள் சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள பதவியுயர்வு திகதிக்கு உடன்முன்னரான **ஐந்து (05)** வருடங்களுள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**4.2.3 - 01.06.2013 இலிருந்து நடைமுறையிலுள்ள சேவைப்பிரமாணக்குறிப்பிற்கமைய**

(அ). மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகுதியின் **தரம் I** இல் குறைந்தது **ஆறு (06)** வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருப்பதுடன் உரிய **ஆறு (06)** சம்பள ஏற்றத்தினையும் உழைத்துப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ). தரமுயர்வு வழங்கும் தினத்துக்கு உடன் முந்திய **ஐந்து (05)** வருட காலத்தில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

.

(இ). அனுமதியளிக்கப்பட்ட செயலாற்றுகை தரங்கணிப்பு செயன்முறைக்கு இணங்க தரமுயர்வு வழங்கும் தினத்துக்கு முன்னரான **ஆறு (06)** வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்திலான அல்லது அதனைவிட உயர்ந்த மட்டத்திலான செயலாற்றுகையை பெற்றிருத்தல்.

(ஈ). உரிய காலப்பகுதிக்குள் மூன்றாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

## 05. பொதுவான தகைமை :-

விண்ணப்பதாரிகள் மேலே குறிப்பிட்ட பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் பெற்றிருப்பதுடன், வடமாகாணத்தின் எந்தப்பகுதியிலும் சேவை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

## 06. ஆட்சேர்ப்பு முறை :-

6.1. வடக்குமாகாணத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) விசேட தரத்திற்கு அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டம், அரச பொது நிர்வாக சுற்றறிக்கைகள், தாபனவிதிக்கோவை, மாகாண கொள்கைகள் மற்றும் விளம்பரத்தின் **பந்தி 10** இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஆட்சேர்ப்பு செய்யப்படும். அத்துடன் விண்ணப்பதாரிகள் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரீசிலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையென தெரியவருமிடத்து இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும்.

6.2. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) விசேட தரத்திற்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கேற்ப சேவைமூப்பு மற்றும் திறமை அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை மூலமாக அலுவலர்கள் தெரிவு செய்யப்படுவர்.

6.3. அனைத்து விண்ணப்பதாரிகளும் விசேடதர பதவியுயர்விற்கு தகைமைபெறும் திகதிக்கு முன்னதாக பதவிக்கு ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் அவசியமானதாகும். வெற்றிடங்களை நிரப்பும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரிகளுக்கிடையில் ஒவ்வோர் வெற்றிடங்களும், ஏற்பட்ட தினத்திற்கு முன்னர் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர்களின் திறமைகளின் ஒழுங்கிற்கு ஏற்ப குறித்துரைத்த பதவியேற்றத்திற்காக கவனத்திற்கொள்ளப்படும்.

**07. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-**

விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இக்கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு முன்னரோ, கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் போதோ அல்லது கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருமாயின், அவரின் பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும் என்பதுடன் சமர்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரசசேவையிலிருந்து நீக்கப்படலாம். மேலே 6.3 பந்தியில் கூறப்பட்ட விடயங்களை விண்ணப்பதாரிகள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**08. விண்ணப்பிக்கும் முறை :-**

8.1. இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 (21cmx29cm) அளவிலான தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து, இல 01 தொடக்கம் 10 வரை முதலாம் பக்கத்திலும், இல. 11 தொடக்கம் 15 வரை தாளின் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்குமாறு விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

8.2. உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமையாதவையும், பிழையின்றி பூரணப்படுத்தப்படாதவையும், முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித அறிவிப்புக்களுமின்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத் தவறுவதால் ஏற்படும் விளைவுகளுக்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8.3. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் " ***வடக்கு மாகாண தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் I லிருந்து விசேட தரத்திற்கு சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் தரமுயர்த்துதல் 2007-2018 (2020)"*** குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

8.4. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **2020 செப்ரெம்பர் மாதம் 28** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் திணைக்களத்தலைவர் மூலம் (ஓய்வுபெற்றவர்கள் கடைசியாக பணியாற்றிய திணைக்களத்தலைவரூடாக) " **செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்."** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**09.** விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேணடும்.

(அ). தேசிய அடையாளஅட்டை
(ஆ). செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்)
(இ). செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

**10. கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை :-**

கட்டமைப்புச்சார் நேர்முகப்பரீட்சையின் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக புள்ளிகள் வழங்கப்படும். **(மொத்தம் 100 புள்ளிகள்)**

| **இல** | **புள்ளிகள் வழங்கப்படும் விடயப் பரப்புக்கள்** | **உச்ச புள்ளிகள்** |
|---|---|---|
| 01 | **சேவை அனுபவம்**<br>உரிய அடிப்படைத் தகைமைகளுக்கு அப்பால் பூர்த்தி செய்துள்ள செயலூக்கமிக்கதும் திருப்திகரமான சேவைக் காலம் | 50 புள்ளிகள் |
| 02 | **திறமை**<br>(சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் அனுமதியளிக்கப்படுகின்ற புள்ளி வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் திறமை தீர்மானிக்கப்படும்) | 45 புள்ளிகள் |
| 03 | நேர்முகப்பரீட்சையில் காட்டும் திறமை | 05 புள்ளிகள் |
| | **மொத்தம்** | **100 புள்ளிகள்** |

**11.** இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அல்லது குறிப்பிடப்படாத விடயங்களில் கருதப்படுகின்ற அல்லது கருதப்படாத ஏதேனும் தெளிவின்மை சம்பந்தமாக மாற்றங்களை மேற்கொள்வது தொடர்பில் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அதே போன்று ஏதேனும் விசேட காரணங்களின் நிமித்தமாக குறித்த கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையை நடாத்த முடியாமல் போகும் பட்சத்தில் அது சம்மந்தமாக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

**12.** சேவையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் இப்பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ நிரப்புவது சம்பந்தமான முடிவு நியமன அதிகாரியாலேயே தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு:-**

01.01.2007 தொடக்கம் 31.12.2018 வரையான காலப்பகுதியில் **சேவையாற்றி ஓய்வு பெற்ற அலுவலர்கள்** இவ் ஆட்சேர்ப்புக்கு தகைமையுடையவர்களாக காணப்படுவார்களாயின் அவர்களது விண்ணப்படிவங்களையும் பெற்று உறுதிப்படுத்தி அனுப்பி வைப்பது திணைக்கள தலைவர்களின் கடமையாகும்.

**சி.திருவாகரன்,**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.

பிரதி :- 1. பிரதம செயலாளர், வடக்கு மாகாணம். - தகவலுக்காக.

2. ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாணம். - தகவலுக்காக.